# DEPOSITION OF WITNESS
# IN THE COURT OF THE ADDITIONAL DISTRICT JUDGE.
# TIRUVANNAMALAI.

**S.C. No.76/2015**
**PW15**

| | | |
|---|---|---|
| Name | : | சுப்பிரமணி |
| Father's/Husband's Name | : | கந்தசாமி |
| Village | : | |
| Taluk/District | : | |
| Caste | : | |
| Calling | : | |
| Religion | : | |
| Age | : | |

Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 of the day of 20.06.2025.
Accused present.

**முதல் விசாரணை**

நான் தற்போது திருவண்ணாமலை கிராமிய காவல் நிலையத்தில் சிறப்பு உதவி ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 2013 ல் மேல்செங்கம் காவல் நிலையத்தில் தலைமை காவலராக பணிபுரிந்தேன். 01.09.2013 ல் உதவி ஆய்வாளர் குமரேசனுக்கு தர்மபுரி மருத்துவமனையில் இருந்து கிடைக்கப்பட்ட தகவலின் பேரில் அங்கு சிகிச்சையில் இருந்த சக்திவேல் த .பெ. செல்வராஜ் என்பவரை விசாரித்து புகார் வாக்குமூலம் பெறுமாறு பணிந்தார். நான் மேல்செங்கத்தில் இருந்து தர்மபுரி மருத்துவமனைக்கு சென்றேன் . அங்கு மேற்படி சக்திவேல் உள்நோயாளியாக அனுமதிக்கப்பட்டிருந்தார். 01.09.2013 அன்று காலை 9 முதல் 11 மணிக்குள் அவரிடம் புகார் வாக்குமூலம் பதிவு செய்தேன். அது ஏற்கனவே அ.சா.ஆ. 1 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது. அந்த வாக்குமூலத்தை நிலையம் கொண்டுவந்து உதவி ஆய்வாளர் குமரேசனிடம் ஒப்படைத்தேன் . இது சம்மந்தமாக ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

**<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை-</u>**

01.09.2013 அன்று காலை 7 மணிக்கு நான் காவல் நிலைய பணிக்கு வந்தேன் . என்னிடம் உதவி ஆய்வாளர் குமரேசன்தருமபுரி மருத்துவமனைக்கு செல்லவேண்டுமென்று காலை 8.30 மணிக்கு சொன்னார் . மேல்செங்கத்தில் இருந்து தருமபுரி சுமார் 75 கி.மீ இருக்கும். நான் பேருந்தில்தான் மேல்செங்கத்தில் இருந்து தருமபுரி சென்றேன் . அது விரைவு பேருந்து என்பதால் 1 மணி நேரம் 30 நிமிடத்தில் போய் சேர்ந்தேன் . புகார் வாக்குமூலத்தை மருத்துவமனை படுக்கையில் இருந்த சக்திவேல் சொல்ல சொல்ல நான் எழுதினேன். வாக்குமூலம் பதிவு செய்ய 1 மணி நேரம் ஆனது . நான் மருத்துவமனைக்கு 9.30 -10 மணியளவில் சென்றேன். சுமார் 11 மணிக்குள் வாக்குமூலம் பதிவு செய்துவிட்டேன் . நான் எனது விசாரணையிலோ, ஆய்வாளர் என்னை விசாரிக்கும்போதோ என்னுடன் எந்த மருத்துவர் இருந்தார் என்று கூறியுள்ளேனா என்றால் அதை பற்றி எனக்கு தெரியவில்லை. நான் விபத்து பதிவேடு நகலை பார்த்தேனா என்றால் பார்த்தேன். 30.08.2013 அன்று இரவு தீர்த்தமலை ஆரம்ப சுகாதார நிலையத்தில் இருந்து தகவல் ஏதாவது வந்ததா என்றால் வரவில்லை . அதற்கு அடுத்த நாள் அரூர் அரசு மருத்துவமனையில் இருந்து சக்திவேல் சம்மந்தமாக தகவல் ஏதாவது வந்ததா என்றால் தெரியாது . 01.09.2013 ல் இரவு 11 மணியளவில் எதிரி மீது வழக்கு பதிவு செய்யப்பட்டது என்றால் சரிதான் . நான் தருமபுரி மருத்துவமனைக்கு செல்லவில்லை என்றும், எந்த வாக்குமூலமும் பதிவு செய்யவில்லை என்றும், புகார் வாக்குமூலத்தில் சக்திவேலின் விரல் பதிப்பு இல்லை என்று சொன்னால் சரியல்ல . நான் வாக்குமூலம் பதிவு செய்தபோது சக்திவேலுக்கு குளுக்கோஸ் ஏற்றப்பட்டு இருந்தது. அந்த சமயத்தில் சக்திவேலுடன் அவர் தாயார் இருந்தார் . சக்திவேலின் தாயாரிடம் எந்த கையொப்பமும் பெறவில்லையா என்றால் எனக்கு சரியாக ஞாபகம் இல்லை .

Taken down by me in Open Court read over of the witness and to acknowledged by him/her as correct.

**Sd/- B.C. Gopinath**
Additional District Judge,
Tiruvannamalai.